www.tamilarangam.net

சொந்த மண்ணை மீட்கவே இந்த மண்ணில்
நாங்கள் எழுவோம்! அணிதிரள்வோம்!!

# கண்டனப் பேரணியும் பொதுக் கூட்டமும்

## 18-11-95 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணி

**பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களே!**

இனவெறி பிடித்த சந்திரிகா அரசு ஆதிக்கவெறியுடனும் இரத்தப் பசியுடனும் எங்கள் வீட்டுக் கதவைத் தட்டுகிறது. 5 லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களை, சொந்த வாழ் விடங்களை விட்டு விரட்டியடித்துள்ளான் எதிரி. அகதியான மக்களை எதிரியின் ஆட்லெறிக ளும், ஏறிகணைகளும் கொன்று குவிக்கின்றன. கோயில்கள், பாடசாலைகள், அகதி முகாம்கள் எங்கிருந்தாலும் தமிழின அழிப்புக்காய் எதிரி அலைகிறான்.

இன்னுமா நாம் உறங்கிக் கிடப்பது உலகத் தமிழா?

இடம்பெயர்ந்த மக்களின் நெரிசலிலே நசியுண்டு இறந்த பிஞ்சுக் குழந்தைகளின் அழுகுரல் கேட்க வில்லையா தமிழா?

ஆயிரமாயிரமாய் அகதிகளான எமது மக்களின் கண்ணீர்க் கதைகள் பலவற்றை நீ கேட்க வில்லையா?

இதோ! இப்பொழுதே எழுவோம்!

புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட சக்தியினால் எதிரியின் நெஞ்சினை உலுக்கி சர்வதேச சமூகத்தின் இதயங்களைக் கசியச் செய்வோம்!

ஆயிரமாயிரமாய் அணிதிரள்வோம் வாருங்கள்!

எம் தேச மக்களின் நெஞ்சுறுதிக்கு வலுச்சேர்ப்போம் வாருங்கள்!

எமது ஒவ்வொரு அடி நிலத்திற்காகவும் உயிராயுதமாய்ப் பாயும் வேங்கைகளின் வேகத்திற்கு உரமூட்டுவோம் வாருங்கள்!

**பேரணி ஆரம்பமாகி முடிவடையும் இடம்:**

**Place de la République ➔ Place de la Bastille**

மேலதிக தொடர்புகட்கு: தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்ஸ் - 43 58 11 42